# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 94/2020 தேதி- 27.10.2025

(D.W.1) .கலஸ்டின்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பட்டிகை சொத்தின் 1969 ஆம்ஆண்டு எழுதிய முந்தைய ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. தற்போதுவரை அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்கிற விபரம் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு கிரையம் கொடுத்த சொத்து கிருஷ்ணபிள்ளைக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் பி பட்டிகையாக ஒதுக்கப்பட்ட சொத்து ஆகும். கிருஷ்ணபிள்ளை எனது அப்பாவிற்கு 8 1/2 சென்ட் சொத்து எழுதிக்கொடுத்தார். கிருஷ்ணபிள்ளைக்கு எவ்வளவு சொத்து பாகப்பிரிவினைப்படி கிடைக்கப்பெற்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றிய விபரம் தெரியாது. கிருஷ்ணபிள்ளை அவருக்கு கிடைத்த சொத்தில் யார்யாருக்கு எவ்வளவு கொடுத்தார் என்கிற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது அப்பாவிற்கு கிருஷ்ணபிள்ளை முதன்முதலாக எந்த ஆண்டு எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. உத்தேசமாக எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் 22 வருடம் இருக்கலாம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 4 ஆவணம் கிருஷ்ணபிள்ளை எனக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ- 4 ஆவணத்தில் கிருஷ்ணபிள்ளைக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் டி பட்டிகை ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது, டி பட்டிகை சொத்தா அல்லது பி பட்டிகை சொத்தா என்றால் வா.சா.ஆ- 4 ஆவணத்தில் பி பட்டிகை என எழுதியிருக்கவேண்டும் ஆனால் டி பட்டிகை என எழுதியிருக்கிறது.

வாதியின் முன்னோர்களுக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த பட்டிகை ஒதுக்கப்பட்டது என்றால் எந்த பட்டிகை ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ- 4 ஆவணத்தில் கிருஷ்ணபிள்ளைக்கு மொத்தம் எவ்வளவு சொத்து கிடைத்தது அதில் யார்யாருக்கு எவ்வளவு கொடுத்துவிட்டு மீதம் இருக்கும் சொத்தை எனக்கு கிரையம் கொடுத்ததாக எழுதியிருக்கிறதா என்றாலும் எனது அப்பாவிற்கு போக மீதி சொத்தை எனக்கு கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால்

அவ்வாறு குறிப்பிடவில்லை. கிருஷ்ணபிள்ளையாகிய 1 ஆம் பிரதிவாதி தற்போது உயிருடன்தான் இருக்கிறார். வழக்கின் வாதிக்கு சொத்துக்கள் முறைப்படி எவ்வாறு வந்தது என்று தெரியுமா என்றால் பாகப்பிரிவினை அடிப்படையில் கிடைத்தது. மேற்படி பாகப்பிரிவினையின்படி பி பட்டிகையாக பிரிக்கப்பட்ட சொத்திலிருந்துதான் வாதிகளுக்கு உரிமை வந்ததாக வாதிகள் கூறுகிறார்கள் அது சரியா தவறா என்றால் அது தவறு.

பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த பட்டிகையின் அடிப்படையில் வாதிகளுக்கு உரிமை வந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் பி பட்டிகை சொத்திற்கு மட்டும் செல்வதற்கு 5 லிங்ஸ் பாதை ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் கூறப்பட்டிருக்கிறது ஆனால் அந்த பாதைக்கும் வாதிக்கும் சம்பந்தம் கிடையாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்துள்ளேன்.

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் பகுதி வாதியினுடையது. அதில் D, E, F, G பகுதி கிருஷ்ணபிள்ளையிடமிருந்து எனது அப்பா வாங்கிய பகுதி. ரோட்டிலிருந்து நீலநிறத்தில் குறிப்பிட்டிருக்கும் பகுதி பாதையா என்றால் முன்பு ரோட்டிலிருந்து 2 1/2 அடி உயரத்தில் முன்னால் ஒரு பாதை இருந்தது. பல வருடங்களாக வாதி 2 1/2 அடி உயரத்தில் இருக்கும் பாதையைத்தான் பயன்படுத்தி வந்தார். சிவப்பு நிறத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் பகுதியைதான் வாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தற்போதும் வாதி அந்த வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் 4 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டது.

மேற்படி 2 1/2 அடி உயரத்தில் இருக்கும் பாதையைத்தான் வழக்கு பி பட்டிகை சொத்தாக வாதி பிராதில் குறிப்பிட்டுள்ளார் என்றால் 2018 க்கு பிறகுதான் அதை திருத்தம் செய்து வீதியாக்கியுள்ளார். D, E, F, G பகுதியை எனது அப்பா எப்போது வாங்கினார் என்றால் 18 வருடங்களுக்கு முன்பாக கிருஷ்ணபிள்ளையிடமிருந்து எனது அப்பா வாங்கினார். மேற்படி 2 1/2 அடி பாதை அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. எனது அப்பாவிற்கு கொடுக்கப்பட்ட பின்பு எவ்வளவு காலம் கழித்து எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 3 வருடம் கழித்து 2017 ல் எனக்கு 1/2 சென்ட் சொத்தை எழுதிக்கொடுத்தார்.

என் அப்பாவிற்கு கிருஷ்ணபிள்ளை முதன்முதலாக எழுதிக்கொடுத்த சொத்தின் சர்வே நம்பர் 273/1 எ ஆகும். அந்த சர்வே நம்பர் தவறானது என்று எனது அப்பா கிருஷ்ணபிள்ளையிடம் சொல்லி ஒரு சீர்திருத்தப்பத்திரம் பதிவு செய்தார் என்றால் சரிதான். (சாட்சி தற்பொழுது என் அப்பாவிற்கு முதலில் எழுதிக்கொடுத்த சொத்தின் சர் வே நம்பர் மாறியிருந்தது. காரணம் கிருஷ்ணபிள்ளை வேறொரு சொத்தை அதில் குறிப்பிட்டிருந்தார்) தவறாக எழுதப்பட்ட சர்வே நம்பர் என்ன என்று எனக்கு தெரியாது. தவறான சர்வே நம்பர் எனக்கு தெரிந்தும் அதை கூறினால் எனது வழக்கு பாதிக்கும் என்பதற்காக எனக்கு தெரியாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

எனது எதிருரையிலும் சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் சர்வே நம்பர் தவறாக இருந்தது என்றும் அதனால் சீர்திருத்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்கிற விபரத்தை நான் கூறவில்லை என்றால் சரியல்ல எனது எதிர்கோருரிமை மனுவிலும் அதை கூறியுள்ளேன். வாதிகள் பாகப்பிரிவினை பத்திரத்தில் பி பட்டிகை சொத்து அவர்களுக்கு கிடைத்ததாக கூறுகிறார்கள் வழக்கிற்காக நான் பொய்யாக பி பட்டிகை எனக்கு ஒதுக்கப்பட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்குப்பின் முரணாக கூறுவது எதிர்கோரிக்கை மனுவில் கோரியுள்ள சொத்து எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால்தான் என்றால் சரியல்ல.

எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் நடுப்பகுதியில் பாகப்பத்திர எண் 2391/69 ல் சி பட்டிகையாக கிருஷ்ணபிள்ளை என்பவருக்கு ஒதுக்கிய சொத்தில் ஒரு பகுதியாகும் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த கிருஷ்ணபிள்ளைதான் எனக்கு எழுதிக்கொடுத்த கிருஷ்ணபிள்ளையா என்றால் இந்த கிருஷ்ணபிள்ளைதான். பாகப்பிரிவினை பத்திரப்படி கிருஷ்ணபிள்ளைக்கு கிடைத்த சி பட்டிகை சொத்து அனைத்தையும் விற்றுவிட்டதால் எனக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் டி பட்டிகையாக தவறாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

எனக்கு எழுதிக்கொடுத்த சொத்து அவருக்கு உரிமையில்லாத சொத்து என்பதால் எதிர்கோருரிமை மனு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. வாதிகள் காலம்காலமாக மேற்படி 5 லிங்ஸ் பாதையைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். நான் அவர்கள்மேல் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அளக்கும்போது 1/2 சென்ட் சரியாகத்தான் இருந்தது. பின்பு வரைபடம் தயாரித்தபோது வாதிகளுக்கு சாதகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எந்த மாதம், எந்த வருடம் அளந்தார்கள் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பாக நீதிமன்ற ஆணையர் வந்து அளந்தார் அன்று நான் அங்குதான் இருந்தேன். வாதிகள் பாகப்பிரிவினையின்படியும் அனுபவத்தின்படியும் பி பட்டிகை சொத்தை எ பட்டிகைக்கான பாதையாக இருக்கிற காரணத்தால் அந்த பாதை அனுபவத்தை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் 2 1/2 அடி உயரத்தில் இருந்த பாதையை தற்போது சமபடுத்தி பாதை இருப்பதாக கூறுகிறார்கள். நான் 2 1/2 அடி உயரத்தில் பாதை இருப்பதாக கூறுவது பாகப்பிரிவினையில் 5 லிங்ஸ் பாதை என குறிப்பிட்டிருக்கும் பாதை என்றால் சரிதான்.

வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் எனது எதிர்கோருரிமை மனு தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல. வாதி என் மேல் ஒரு புகார் திருவட்டார் காவல்நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரிதான். போலிசார் அதனை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் விசாரணை செய்தபோது இனிமேல் எந்த தொந்தரவும் செய்யமாட்டேன் என எழுதிக்கொடுத்தேன் என்றால் அவ்வாறு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சி பட்டிகை 7 ஆம் கட்சி கிருஷ்ணபிள்ளை என்பவருக்கும் டி பட்டிகை 8 ஆம் கட்சி பாலையன் நாடாருக்கும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

டி பட்டிகை சொத்து பாலையனுக்கு எழுதிக்கொடுத்திருப்பதால் கிருஷ்ணபிள்ளைக்கு டி பட்டிகை சொத்தைப்பொறுத்த எந்த உரிமையும் இல்லாமல் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார் அதனால் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் அதனால் நான் கோரிய எதிர்கோருரிமை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.